**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 110/2013**

பெயர் : பெரியசாமி
சாட்சி – வா.சா–1 நாள்:22.04.2025

---

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)**

1. எனது தகப்பனாரும் முதலாம் பிரதிவாதியின் தகப்பனாரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 1964 ஆம் ஆண்டு முருக கவுண்டரும், சென்னிமலை கவுண்டரின் மகன் முதலாம் பிரதிவாதியும், பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். சென்னிமலை கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தினைத்தான் முருக கவுண்டரும், சென்னிமலை கவுண்டரின் மகன் முதலாம் பிரதிவாதியும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் மூல பத்திரங்களை பார்த்து இருந்தால் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், நான் தெரிந்து கொண்டே இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கினை நான் தடம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். க.ச.428 காலையில் வடகிழக்கு மூலையில் இருந்து மேற்படி காலையிலேயே பொது இடமான 37 செண்ட் பூமிக்கு செல்வதற்கு தான் தடம் கேட்கிறேன் என்றால் சரிதான். மேற்படி 37 செண்டு பூமி கிணறு சிதிலமடைந்து முட்புதர்கள் முளைத்து பயன்படுத்தாமல் உள்ளது என்றால் சரிதான். க.ச.428 காலையில் வடபுறம் உள்ளது தான் பிரதிவாதிகளின் பூமி என்றால் சரிதான். தென்புறம் எனது பூமி உள்ளது என்றால் சரிதான்.

3. க.ச.428 காலைக்கு வடபுறமாக செல்லும் தார் ரோடு எனது மற்றும் பிரதிவாதி பூமியை ஒட்டியே மேற்புறமாக பருவாய் கிராமம் வரை செல்கிறது என்றால் சரிதான். நான் மேற்படி ரோட்டின் வழியாக சென்று வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது நிருபன வாக்கு மூலத்தில் ஒன்பதாவது பத்தியில் சொல்லி உள்ள சங்கதிகளை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. க.ச.420 காலைக்கு தடம் கேட்டு பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான்.

4. க.ச.428 காலையில் வடபுறமாக கிழக்கோட்டில் பெரிய பெரிய மரங்கள் உள்ளன என்றால் சரிதான். பொழி மீது மேற்படி மரங்கள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி மரங்கள் உள்ள பகுதியில் இருந்து கிழக்கே மூன்றடி தள்ளி மூன்றாம் நபர்கள் கம்பி வேலி போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி மூன்றாம் நபர்கள் கம்பி வேலி போட்ட பின்னர் தான் அவர்களுடன் சேர்ந்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. க.ச.428 காலையில் நான் உள்ளதாக சொல்லும் தடத்தினை நான் எந்த காலத்திலும் பயன்படுத்தியதே கிடையாது என்றால் சரியல்ல. நான் எனது பூமிக்கு செல்வதற்கு நான் இருப்பதாக சொல்லும் தடத்தினை பயன்படுத்தி தான் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா தடம் 13 அடி என்று எந்த ஆவணத்திலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது பூமிக்கு செல்வதற்கு மெயின் ரோட்டில் இருந்து நேரடியாகவே செல்ல முடியும் என்றும் நான் சொல்லும் தடத்தை பயன்படுத்தி தான் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தான் பிரதிவாதிகள் பொது இடத்தை பயன்படுத்த விடாமல் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாகத்தான் பொது இடம் சிதிலம் அடைந்து உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் முதல் தடவை வழக்கு சொத்தை அளந்ததற்கும் இரண்டாம் முறை அளந்ததற்கும் வேறுபாடு இருந்தது என்றால் சரியல்ல.

7. நீதிமன்ற ஆணையர் எனக்கு சாதகமாக பிரதிவாதிகள் இடத்தை மூன்று அடி சேர்த்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வே கற்களை கணக்கில் கொள்ளாமல் அவராகவே அளந்து கொண்டார் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/. V.Kalidasan, B.Com.,L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.